# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **D.A.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

நாலாயிரம் பாசுரங்களையும் படிக்க முடியாதவர்கள் தினம் ஒரு முறை ஆண்டாளுடைய 29ம் திருப்பாவைப் பாசுரமாகிய "சிற்றஞ்சிறுகாலே" யை மட்டுமாவது சேவிக்க வேண்டும் என்பர் பெரியோர். வைணவத்தின் சாராம்சத்தைக் கொண்ட இந்த திவ்யப் பாடலிலே "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமே யாவோம், உனக்கே நாம் ஆட் செய்வோம்" என்கிறாள் பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை. ஒவ்வொரு ஜீவாத்மாவும் பரமாத்மாவுக்கு கைங்கர்யம் செய்வது நித்யஸ்வரூபம் என்ற கருத்தைத்தான் ஆண்டாள் இங்கே சொல்கிறாள். ஆனால் நாயக நாயகி பாவனையில் அதைப் பொதிந்து சொல்கிறாள். உலகியலில் கணவனுக்கு மனைவி தொண்டு செய்வது முறை என்ற கருத்தைத்தான் இங்கே காண்கிறோம்.

பெண்ணடிமை ஒழிய வேண்டும் என்றும் ஆணும் பெண்ணும் சமம் என்றும் இன்று தலைவர்கள் முழங்குகிறார்கள். அரசாங்கச் சட்டம், எழுத்தாளர்களின் பேனா, சினிமாக்களின் கதைப்போக்கு, பேச்சாளார்களின் அனல் பறக்கும் குரலொலி எல்லாமே இந்த எண்ணத்தைத் தான் பிரதிபலிக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், கணவனுக்கு மனைவி ஆட்செய்வது என்பது, பழங்கால மூட நம்பிக்கையாகத்தான் தோன்றும். எதிலும் தெளிந்த அறிவுடன் செயல்பட்ட நம் முன்னோர்கள் பெண்களைப் பதிசேவை என்ற பெயரில் முடக்கக் காரணம் என்ன? சுதந்திரத்தை அவர்கள் ஏன் மறுத்தார்கள்? சிந்திக்க வேண்டும்!

பலர் கொண்ட ஒரு சமுதாயத்தில் சட்டம் தீட்டும் போது, அந்தச் சட்டம் ஏற்படுத்தும் பாதிப்புக்களைச் சிந்திக்க வேண்டும். நாட்டில் அரிசிப் பஞ்சம் ஏற்படும் போது ஒரு மன்னன் "அனைவரும் மீன் சாப்பிடுங்கள்!" என்று உத்தரவிட்டால் பார்வைக்கு அது சரியான தீர்வாகத் தோன்றலாம். ஆனால் மீன் சாப்பிடும் பழக்கம் இல்லாதவர்களுக்கு இந்தச் சட்டம் மகிழ்ச்சி தருமா? பாலுக்கும் பஞ்சம் ஏற்படும் போது அனைவரும் விஸ்கி சாப்பிடுங்கள் என்று அந்த மன்னன் ஆணையிட்டால் விஸ்கியை வெறுப்பவர்களுக்கு அந்தச் சட்டம் பொருந்துமா?

சமுதாயத்தில் மக்களின் இயல்பும் இயலாமைகளும் நபருக்கு நபர் வேறுபடும். மனித குலத்தின் இருபாதிகள் என்றாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும், குணத்திலும் உடல் அளவிலும் நிறைய வேறுபாடுகள் உண்டு. மனித வாழ்வின் இருபேறு விதமான தேவைகளை இந்த இருபாலார் வேறுபாட்டினால், ஆண்டவன் சமாளிக்கிறான். ஆணாய் இருந்து மனிதன் சந்திக்க

வேண்டிய சிக்கல்கள், பெண்ணாய் இருந்து சமுதாயம் ஜெயிக்க வேண்டிய பிரச்சனைகள் என்று இரண்டு வகை உண்டு. இந்த வேறுபாட்டை நம் முன்னோர்கள் உணர்ந்திருந்ததால்தான் இந்த இரு பாலாருக்கும் இரண்டு விதமான வாழ்க்கைமுறைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

பெண்ணின் மென்மை, கருணை, பொறுமை, அன்பு, பொறுத்துப் போகும் தன்மை ஆகியவை குடும்பத்துக்கும், எதிர்கால சந்ததியை உருவாக்குவதற்கும் குடும்பத்தை குதூகல நந்தவனமாக்குவ தற்கும் தேவை. இந்தச் சாதனைகளை ஆண்மகனிடம் நீங்கள் எதிர்பார்க்க முடியாது. அவனுடைய, கோபம், எதையும் எதிர்த்துப் பார்க்கும் மனப்பான்மை, திடசித்தம், சவால்களை மேற்கொள்வதில் உள்ள ஆர்வம் ஆகியவை உலக எதிர் நீச்சலுக்கு ஏற்றவை. பணநஷ்டம், எதிரிகளின் பெருச்சாளித் தொல்லைகள், வாழ்வில் நொடிப்பு, அவமானம் ஆகியவற்றைத் தாங்கிக் கொண்டு, குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை யும் சமூகவியல் தேவைகளையும் நிறைவேற்றித் தருவதில் அவன் மன்னன். இவை அவனுக்கு சுலபம்.

இதுதவிர, ஒரு முக்யமான வேறுபாடு உண்டு. ஒரு ஆண்மகன் வீட்டை விட்டு வெளியே போகும் போது அவனை இந்தச் சமுதாயம் ஒரு மனிதனாகத்தான் பார்க்கிறது. ஆனால் ஒரு பெண் வீதியில் நடமாடினால் அவளை ஒரு கவர்ச்சிப் பொருளாகத் தான் காண்கிறது. அவள் படித்துப் பட்டம் பெற்றும் பதவி வகித்து சாதனைகள் புரிந்தாலும் சதை வனப்பு, ஆகியவை அவளைப் பிறர்க்கு பெண்ணுருவமாக, ஒரு போகப் பொருளாகத்தான் காட்டுகிறது. அதனால் தான் ஹோட்டல்களில் வரவேற்பும் பணியாளராகவும், விமானப்பணிப் பெண்களாகவும் மகளிரை நியமிக்கிறார்கள். பெண்களை போக வஸ்துவாகப் பார்க்காதீர்கள் என்று பிரசாரம் செய்கிறார்கள். கரும்பைக் கரும்பு என்னாமல் துரும்பு என்றா சொல்வார்கள்? மனிதமனத்திலே சலனங்களை உண்டு பண்ணுவது பெண் உடலின் ஸ்வபாவம். பெரிய பெரிய முனிவர்களும் மன்னர்களும் இதனால் தான் வீணாகி இருக்கிறார்கள்.

வைர நகையைப் பெட்டியில் பூட்டிப் பாதுகாப்பது போல நம் முன்னோர்கள் பெண்களை வீட்டுக்குள்ளே இருக்கச் சொல்லிப் பாதுக்காத்தார்கள். பிற ஆடவருடன் உரையாடல் கூட ஒரு அளவில் இருக்க வேண்டும் என்றார்கள். வெளி வேலை யெல்லாவற்றையும் ஆண்மகனின் தலையிலே கட்டினார்கள், அலைச்சல், மோதல், ஏமாற்றம் எல்லாம் அவனுக்குத் தான். இந்தத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு குடும்ப பாரதத்தை அவன் சுமப்பதால், அவனுக்குப் பணிந்து, அவனுக்கு ஒத்தாசை புரியும் இல்லத்து அரசியாகப் பெண் இருக்கட்டும் என்று விதித்தார்கள். கஷ்டப்பட்டு அவன் சம்பாதிக்கும் புண்யமெல்லாம் கூட அவளைப் போய் சேரும் என்றார்கள். ஆனால், யாகம் தானம் முதலிய வைதீகச் சடங்குகளில் அவளுக்கு அவர்கள் சம அந்தஸ்தைக் கொடுத்தார்கள்.

பிற்காலத்தில், பெண் கொடுமை தொடங்கியது. ஆண்கள் தம் கடமைகளை மறந்து சுயநலவாதிகளானார்கள். பெண்களின் துன்பத்தைக் கண்டு இரங்கிய

நாட்டுத் தலைவர்கள் அவளை வீட்டுக்கு வெளியே கொணர்ந்து சம்பாதிக்க வைத்தார்கள். சுயச்சார்பை ஏற்படுத்தினார்கள். அது ஒரு தீர்வு போலத் தோன்றினாலும், பல தீய விளைவுகள் ஏற்பட்டன. ஆண்களைத் திருத்துவதற்கு பதில், பெண்களுக்கு ஒரு வித்தியாசமான பதவியைத் தந்ததனால், இதுவரை இல்லாத வேறு சில புதுப்பிரச்சனைகள் உருவாகின.

இன்று, பெண், நாட்டை ஆள்கிறாள். பட்டாளத்தில் செயல்படுகிறாள், விமானம் ஓட்டுகிறாள், தொழில் செய்கிறாள், ஆண்மகனை மோட்டார் பைக்கில் பின்னால் அமர்வித்து ஊர்வலம் வருகிறாள். ஆனால் கீழ்க்கண்ட புது நிலைமைகள் முளைத்துள்ளன.

1. ஒரே வீட்டில் இருவருக்கு வேலை வாய்ப்பு, அதனால் நாட்டில் வேலையில்லாத திண்டாட்டம் அதிகரிப்பு.
2. குழந்தை வளர்ப்பு என்பது ஆள் வைத்துச் செய்யும் கூலி வேலையாகி விட்டது.
3. குடும்பத்து உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து அனுபவிக்கும் இந்தியக் குடும்பப்பாசம் பலி!
4. குழந்தைகள் வளர்ந்து பெற்றோரிடம் காட்டிய நன்றியுணர்வு அதோகதி!
5. தம்பதியர் இருவரும் வேலைக்குப் போகும் போது மாமனார் மாமியார்கள் குழந்தைகளையும் வீட்டையும் பார்த்துக் கொள்ளும் வேலைக்காரர்களாக்கப் படுகிறார்கள்.
6. இதனால் முதியோர்கள் பிரச்னை உருவாகிறது.
7. ஒரு பெண் தன் கணவனல்லாத வேறு ஆண்களோடு அதிகநேரம் சேர்ந்து அலுவல் செய்வதால் அவளுடைய தாம்பத்ய அன்பில் முழுமை குறைகிறது.
8. இதில் தகாத உறவுகளும் தலை தூக்குகின்றன. இன்னொரு கணவனின் மனைவியும் வேறு ஒருத்தியின் கணவனும் ஈடுபடும் டேட்டிங் என்ற சல்லாப விளையாட்டுகள் பட்டணங்களில் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன.
9. ஒழுக்கமும் உண்மையான அன்பும் இல்லாதபோது மனிதப்பண்பாடு எல்லாமும்? பணம் சம்பாதித்தால் போதுமா?
10. விவாகரத்துக்கள், முறை தவறிய உறவுகள் ஆகியவை பெருகுகின்றன. சமூகம் விலங்கின் வாழ்வு முறை நோக்குப் போகிறது.

பெண்கல்வி, பெண் சம்பாத்தியம் ஆகியவை பெண் கொடுமைக்குப் பரிகாரமாக மேற்கொள்ளப்படலாமே தவிர, எந்தவிதமான காரணமுமில்லாமல், பண்டைய பண்பாட்டை புறக்கணிக்க ஒரு வடிகாலாகக் கூடாது. புதுமைப் பெண்களே! நீங்கள் ஒட்டு மீசை வைத்துக் கெள்ளுங்கள். ஒட்டு தாடியும் வைத்துக் கொள்ளுங்கள் முழுக்க ஆண்மக்களைப் போல் வாழுங்கள். யாராவது ஏன் இப்படி?'' என்று கேட்டால் எங்களுக்கு இது தான் பிடிக்கிறது என்று சொல்லுங்கள். ஆனால் ''முன்னோர்கள் பெண்களுக்கு ஏற்படுத்தித் தந்த வாழ்வை விடச் சிறந்த ஒரு வாழ்வை நாங்கள் கண்டு முடித்து விட்டோம்'' என்று மட்டும் சொல்லாதீர்கள். அப்படிச் சொன்னால் அது நூற்றுக்கு இருநூறு சதவீதம் தவறு.